# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 13.01.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா ஹூத் –ன் 3 மற்றும் 4 வசனங்களை ஓதினார்கள்:**

*பொருள்: நீங்கள் அல்லாஹ்வையன்றி (வேறெதையும்) வணங்காதீர்கள். நிச்சயமாக நான் அவன் புறமிருந்து உங்களை எச்சரிப்பவனாகவும் நற்செய்தி கூறுபவனாகவும் வந்துள்ளேன்.*

*மேலும் நீங்கள் உங்கள் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரி அவன் பக்கம் திரும்புங்கள். (அவ்வாறாயின்) அவன் உங்களுக்கு, குறிப்பிட்ட ஒரு காலம் வரை அழகிய பொருளை வழங்குவான். மேலும் அருளுக்குரிய ஒவ்வொருவருக்கும் தன் அருளை வழங்குவான். பின்னர் நீங்கள் புறக்கணித்து விட்டால், நிச்சயமாக நான் உங்களுக்குப் பெருந் தண்டனைக்குரிய ஒரு நாளைக் குறித்து அஞ்சுகின்றேன். (11:3&4)*

இன்றைய காலத்தில் உலகின் எல்லா இடங்களிலும் ஏதாவது ஒரு வகையில் குழப்பம் நிலவுகிறது. இது மனிதன் தனது பிறப்பின் அசல் நோக்கத்தை மறந்ததன் விளைவாகும். அதாவது அல்லாஹ்வுக்கு இபாதத் செய்வதில் கவனம் மற்றும் இறை நெருக்கம் பெற முயற்சி செய்தல் ஆகியவற்றை மறந்ததன் காரணத்தால் ஆகும். இறை நெருக்கம் இபாதத் செய்யாமல் கிடைக்க முடியாது. இபாதத் என்றால் என்ன? ஐவேளை தொழுகையை நிறைவேற்றுவது மட்டும் அல்ல. இந்த தொழுகைகளையும் நன்கு உணர்ந்து நிதானமாக தொழ வேண்டிய தேவை உள்ளது. தொழுகையில் வெளிப்படையான செயல்பாடுகளை நிறைவேற்றுவதால் மட்டும் கடமை முடிந்து விடாது. மாறாக நமது ஒவ்வொரு விவகாரங்களிலும் இறை இருப்பை முன்னிறுத்த வேண்டியது அவசியமாகும். அல்லாஹ்வின் பண்பை நம்மில் பிரதிபலிக்க வேண்டிய தேவை உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை ஒவ்வொரு விஷயத்திலும் பின்பற்றுவது அவசியமாகும். அல்லாஹ்வின் பண்பை நமக்கு முன்னிறுத்தி அதற்கேற்ப நம்மை ஆக்கிக் கொள்வது அவசியமாகும். அல்லாஹ்வின் உரிமை மற்றும் அடியாரின் உரிமையை வழங்குவதற்கு தமது தரப்பில் பரிபூரண முயற்சி செய்வது அவசியமாகும். இந்த நிலையை அடையும் போதுதான் ஒரு மனிதன் – ஒரு மூஃமின் இபாதத்தின் கடமையை நிறைவேற்றியவர் ஆக முடியும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதுபற்றி கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனில் எண்ணற்ற விரிவான விளக்கங்கள், கட்டளைகள் உள்ளன. அதன் சுருக்கம் மற்றும் கருத்து என்ன?

கூறுகின்றார்கள்: அது *அல்லா தஃபுது இல்லல்லாஹ் - இறைவனைத் தவிர வேறு எவருக்கும் ஒருபோதும் இபாதத் செய்யாதீர்கள்.* மனிதப் பிறப்பின் குறிக்கோள் இந்த இபாதத்தே ஆகும். அதுவே அடிப்படை நோக்கமாகும்.

**அதுபற்றி இன்னோரிடத்தில் இறைவன் கூறுகின்றான்:**

*வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்* – இபாதத் என்பது மனிதன் எல்லா வகையான மன அழுக்குகளையும் கோணல்களையும் கலைந்து உள்ளம் என்ற நிலத்தை – ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தை பக்குவப்படுத்துவது போன்று பக்குவப்படுத்துவதன் பெயராகும்.

அரபிகள் கூறுவர். மவ்ருன் முஹப்பதுன். இதன் பொருள்: சுர்மாவை பொடியாக்கி கண்களில் இடும் அளவுக்கு தகுதியாக்குதல் என்பதாகும். அதுபோன்று உள்ளம் என்ற நிலத்தை எந்தக் கற்களும், மேடு பள்ளமும் இல்லாமல் சமப்படுத்தி தூய்மையாக்குவது போன்று ரூஹ் மட்டுமே இருக்கும் அளவுக்கு உள்ளத்தை தூய்மையாக்குவதற்குப் பெயரே இபாதத் ஆகும்.

இந்த வகையில் ஒரு கண்ணாடியைச் சுத்தப்படுத்தி செப்பனிட்டால் அதில் பிம்பம் தென்படுகிறது. பூமியைச் செப்பனிட்டால் பலவகையான பழங்கள் உருவாகின்றன. எனவே மனிதன் இபாதத்திற்காக படைக்கப்பட்டுள்ளான். அவன் உள்ளத்தைத் தூய்மை செய்ய வேண்டும். அதில் எந்த வகையான அழுக்கும், கற்களும், கோணல்களும் இருக்க விடக்கூடாது. அவ்வாறு செய்யும் போது அதில் இறைவன் தென்படுவான். இதுவே இபாதத் ஆகும். இறைவனுக்காக செய்ய வேண்டும். ஒரு விவசாயி நாற்றை நடுமுன் நிலத்தை உழுது சமப்படுத்துவது போன்று, ஒரு பளபளப்பான கண்ணாடி மின்னுவது போன்று, உள்ளத்தை மாற்றும் போது இறைவனின் முகம் தென்படும். நன்றாக உழுது ஆயத்தம் செய்யப்பட்ட பூமியில் பழங்கள் விளைவது போன்று உள்ளத்தில் மனித ரூஹ் –ல் பழங்கள் விளைகின்றன.

**பின்னர் அன்னார் கூறுகின்றார்கள்:**

உள்ளம் என்ற நிலத்தில், அல்லாஹ் அல்லாதவற்றை விட்டு விலகி இருந்து கற்களையும் மாசுகளையும் அகற்றாத வரை கண்ணாடியைப் போன்று சுத்தமாகவும் சுர்மாவைப் போன்று நுணுக்கமாகவும் ஆக்காத வரை ஓய்ந்து விடக்கூடாது. தொடர்ந்து முயன்று கொண்டிருக்க வேண்டும். இதுபோன்று தனது நிலையை மாற்றாமல் ஒரு மூஃமின் ஓய்ந்து அமர்ந்துவிடக் கூடாது.

எனவே இக்கால குழப்பங்களிலிருந்து தப்பிப்பதற்கும், இறையருளை ஈர்ப்பதற்கும் தூய்மையான முறையில் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. பெரும்பாலும் இவ்வாறு காணப்படுகிறது. மனிதன் நேரடியாக குழப்பம் அல்லது தீமையில் ஈடுபடுவதில்லை என்றாலும் சுற்றுச்சூழலின் தாக்கம் அவர் மீது ஏற்படுகிறது. அதன் ஒரு பகுதியாக அவர் ஆகி விடுகிறார். ஏதாவது ஒரு வகையில் அந்தக் குழப்பத்தில் ஈடுபட்டு விடுகிறார். இதனால் கடமையை நிறைவேற்ற முடியாமல் போவது மட்டுமின்றி அவரையும் அறியாமல் அநீதியிலும் பங்குதாரர் ஆகி விடுகிறார். இதற்குப் பெரும் உதாரணம்தான் சில நாடுகளில் அஹ்மதிகளின் மீது இழைக்கப்படுகிற அநீதிகள் ஆகும். சிலர் அஹ்மதிய்யத் குறித்து சிறிது கூட தெரிந்திருப்பதில்லை. அவர்களும் கூட அஹ்மதிகளின் எதிரிகளின் காரணத்தால் குறிப்பாக பாகிஸ்தானில் உள்ள சட்டத்தின் காரணத்தால் எண்ணற்ற இடங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் குறித்து கீழ்த்தரமான வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர்.

அத்தகைய மக்களின் இறைவணக்கம் தம்மை அறியாமல் இறைவனுக்காக அன்றி இவ்வுலகவாதிகளின் நெருக்கம் பெறுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. வெளிப்படையாக அவர்கள் தொழுகின்றனர். ஆனால் தம்மை அறியாமலேயே இறைவன் கவனமூட்டியுள்ள நன்மைகளின் பக்கம் முயற்சி செய்யாமல் இருக்கின்றான். மார்க்கம் உலகத்துடன் கலந்து விடும் போது; மார்க்கம் தடம் புரளும் போது ஹுகூகுல்லாஹ் ஹுகூகுல் இபாத் (அல்லாஹ்விற்கு செய்ய வேண்டிய கடமை; படைப்பினங்களுக்குச் செய்ய வேண்டிய கடமை) இரண்டும் சீரழிந்து விடுகின்றன. மார்க்க வரலாற்றில் இந்நிலையே காணக் கிடைக்கிறது. ஒரு காலம் வரும் போது மார்க்கத்தில் தடுமாற்றம் ஏற்படுகிறது. எனவே இறைவன் சமுதாயங்களில் நபிமார்களின் தொடரை உருவாக்கினான். ஒரு காலம் கழிந்து மார்க்கம் அதன் அசல் நிலையிலிருந்து விலகும் போது. அதன் ரூஹ் முடிந்து விடத் தொடங்கும் போது சமுதாயங்களை எச்சரிக்கவும், அவர்களை சரியான மார்க்கத்தின் பக்கம் கொண்டு வருவதற்காகவும், இபாதத்தின் ரூஹ்–ஐ நிலைநாட்டுவதற்காகவும் நபிமார்கள் நேரடியாக இறைவனிடமிருந்து வழிகாட்டல் பெற்று தமது கடமையை ஆற்றினர். இவ்வாறு இறைவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அனுப்பியபோது அவர்கள் மூலமாக முஸ்லிம்களுக்கு இறைவனுக்குரிய இபாதத்தின் வழிமுறைகள் கற்றுத் தரப்பட்டன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முழுமை பெற்ற மனிதராக இருந்தனர். இறை பண்பு ஒரு மனிதனிடம் எந்த அளவுக்கு முழுமையாக உருவாக முடியுமோ அந்த அளவுக்கு அவர்களிடம் உருவானது. இந்நிலையில் இறைவன் கட்டளையிட்டான். இந்த ரஸூல் உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரி ஆவார். இவரைப் பின்பற்றினால் என்னை அடைவீர்கள். அவர்களது கட்டாயத் தொழுகைகள் மற்றும் நஃபில் தொழுகைகள் மட்டும் இபாதத் அல்ல. மாறாக அவர்களது ஒவ்வொரு சொல்லும், செயலும் இபாதத் ஆக இருந்தது.

எனவே இந்த இபாதத்தின் தகுதியைப் பெறுங்கள். இந்த அன்பிற்குரிய நபி கொண்டு வந்த ஷரீஅத் கியாமத் வரை முழுமையாகி விட்டது என்று இறைவன் கூறினான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமும் கூற வைத்தான். அதாவது நம்மிடமிருந்து எப்போதும் தொடர்ந்து வருகிற ஒரு நடைமுறை என்னவென்றால், ஒரு காலத்தில் மார்க்கம் அதன் அடிப்படையை விட்டு அகன்று விடும் போது முஸ்லிம்களிடம் குழப்பம் உருவாகும். மார்க்கத்தை விட்டு முஸ்லிம்கள் விலகுவார்கள். அவர்கள் ஆகிரி நபியாக இருந்தும் – அவர்களுக்குப் பிறகு ஷரீஅத்துடன் எந்த நபியும் வர முடியாது என்ற போதிலும் அவர்களது வேதம் கடைசி ஷரீஅத்துடைய வேதம் என்ற போதிலும் கூட மார்க்கத்திலிருந்து மக்கள் விலகுவர். இடைவெளி ஏற்படும். இந்த இடைவெளி அதிகமாகும் போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி அவர்களது உண்மையான பேரன்பர் மார்க்கத்தை உலகில் நிலைநாட்டுவதற்காக இறைவன் புறமிருந்து வருவார். இபாதத்தின் உண்மைத் தன்மையை விளக்குவார். இவை அனைத்தும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மையான சீடராக இருந்ததன் காரணத்தால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமையாக இருந்து கொண்டே இதனை செய்வார். ஆனால் முஸ்லிம்களின் பெரும்பான்மை இன்று வரை இதனைப் புரியவில்லை. ஒருவர் இறைவனது உண்மையான இபாதத்தின் பக்கம் அழைக்கிறார். அதனை விட்டு விலகி தத்தமது வழியில் ஒவ்வொரு முஸ்லிம் பிரிவும் தமக்காக ஒரு பாதையை வகுத்தன. அதனால் உலகில் குறிப்பாக முஸ்லிம் உலகில் குழப்பத்தை தவிர எதுவும் நடக்கவில்லை. இம்மக்கள் இஸ்லாத்திற்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துவது மட்டுமல்ல. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் 1400 ஆண்டுகளுக்கு முன் எச்சரிப்பாளர் ஆக இருந்தது போன்று, இன்றும் எச்சரிப்பாளராக இருக்கின்றார்கள். நான் ஓதிய முதல் வசனத்தின் கடைசியில் கூறுகிறான். நான் உங்களுக்காக அவனிடமிருந்து எச்சரிப்பாளனாகவும் நற்செய்தி கூறுபவனாகவும் இருக்கிறேன். அவர்களின் காலம் கியாமத் வரை உள்ளது. அவர்கள் கியாமத் வரை எச்சரிப்பாளரும் நற்செய்தி கூறுபவரும் ஆவர். இன்றும் கூட அன்னார் தம்மவரையும் அன்னியரையும் எச்சரிப்பவர் ஆவார். நஸீர் என்பதன் பொருள் பயமுறுத்துதல் மட்டுமல்ல. மாறாக எச்சரிக்கை செய்வதும் ஆகும். அதாவது எச்சரிக்கையாக இருங்கள்; தீமையிலிருந்து விலகுங்கள் என்று கூறுகின்றார்கள். அன்னார் இதனையே கூறுகிறார்கள். நான் எச்சரிப்பாளர் ஆவேன். இஸ்லாமிய போதனையிலிருந்து விலகினால் நீங்கள் மார்க்கம், உலகம் ஆகிய இரண்டிலும் நஷ்டமடைவீர்கள். நீங்கள் கலிமா சொல்பவர்களாகவும் என் மீது ஈமான் கொண்டவர்களாகவும் இருந்தாலும் சரியே. மார்க்கத்தை முழுமையாக அமல்படுத்தா விட்டால் அந்த நஷ்டங்கள் உங்களுக்கு ஏற்படும். பிறகு இந்த தத்துவத்தைப் புரிந்து கொண்டால் ஆகரீன்களிடம் எழுப்பப்பட இருக்கிறவரின் போதனைக்கேற்ப உங்களுக்கு உலகம் மற்றும் ஆகிரத்தின் நற்செய்தி உண்டு. அவர் அல்லாஹ்வின் நெருக்கம் பெற்றுத்தர வந்துள்ளார்கள். இபாதத்தின் வழிமுறையைக் கற்றுத் தர வந்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வின் நெருக்கம் பெறும் வழிமுறைகளைப் பற்றி விளக்குகிறார்கள்.

ஆம்! மனிதன் மனதை தூய்மைப்படுத்துபவரின் உதவியின்றி இப்பாதையை முழுமையாகக் கடக்க முடியாது என்பது சரிதான். எனவே தான் இவ்வழியை எளிதில் கடப்பதற்காக இறைவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஒரு முன்மாதிரியாக ஏற்பாடு செய்தான். பிறகு நிரந்தரமாக அவரது உண்மையான பிரதிநிதிகளைத் தொடரச் செய்தான்.

மேலும் கூறுகின்றார்கள்: ஒரு சிறுவன் விவசாயி –ன் மகனாக இல்லாத பட்சத்தில் அறுவடை சமயத்தில் களைக்குப் பதில் தானியக் கதிர்களை வெட்டி வீசி விடுவார் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். ஆன்மீக விவசாயத்தையும் ஒரு முழுமையான மனிதனின் கீழ் இல்லாமல் முழுமையாக செய்ய முடியாது. அவர் விதை தூவுதல், நீர்ப்பாய்ச்சுதல், உழுதல் ஆகிய எல்லா வேலைகளையும் செய்து முடித்தவராக இருத்தல் வேண்டும். அதிலிருந்து மனிதனுக்கு ஒரு (முர்ஷிதே காமில்) முழுமையான வழிகாட்டி தேவை என்பதை விளங்க முடியும். ஒரு மனிதன் முழுமையான வழிகாட்டி இன்றி இபாதத் செய்வது என்பது அறிவற்ற, அனுபவமற்ற ஒரு சிறுவன் வயலில் அமர்ந்து தானியங்களை அறுப்பது போன்றது ஆகும். அவர், தாம் களை எடுப்பதாகக் கருதுகிறார். இபாதத் தானாகவே வந்து விடும் என்று நீங்கள் ஒருபோதும் நினைக்காதீர்கள். ஒரு ரஸூல் வந்து கற்றுத் தராத வரை அல்லாஹ்வின் பக்கம் கவனமும் இறைவனுடன் ஒன்றி விடுதலும் வராது. அதாவது இறைவன்

பக்கம் முழு கவனம் ஏற்படாது. அவனை முழுமையாக அடையாளம் கண்டுகொள்ள முடியாது. பிறகு இயற்கையாகவே கேள்வி எழுகிறது.

இந்த சிக்கலான பணியை எவ்வாறு தீர்ப்பது? அதற்கான நிவாரணத்தையும் கூறுகின்றார்கள். இதற்கு தீர்வாக இறைவன் இஸ்திக்ஃபார் – ஐ ஏற்படுத்தியுள்ளான். இஸ்திக்ஃபார் செய்யுங்கள். தூய மனதுடன் இஸ்திக்ஃபார் செய்தால் அல்லாஹ்வுடைய ரஸூலைப் பின்பற்ற முயற்சி செய்தால் பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்டால், வருங்காலத்தில் பாவங்களிலிருந்து விலக உறுதியும் முயற்சியும் செய்வீர்கள் என்றால் அதுவே உண்மையான இஸ்திக்ஃபார் ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் உண்மையான பிரதிநிதிகளை அனுப்புகிறான். அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு உண்மையான பிரதிநிதிகளை அனுப்புகிறான். இக்காலத்தில் இன்னும் சொல்வதாயின் வருங்காலத்திற்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மையான பிரதிநிதியாவார்கள். எனவே உண்மையான இஸ்திக்ஃபார் செய்பவர், அதன் உயர் தரத்தைப் பெற முயற்சி செய்பவர்களுக்கு இறைவன் நிச்சயமாக வழிகாட்டுவான். அவர் அந்த உண்மையான பிரதிநிதியைப் பின்பற்றினால், அவரது கட்டளையின் படி நடந்தால் நிச்சயமாக வழிகாட்டுவான். அவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்லடியார்களை ஒப்புக்கொண்டு அவரது போதனையின்படி அமல் செய்ய வேண்டும்.

**எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் இதற்கான சிகிச்சையாக இஸ்திக்ஃபார் –ஐ கூறியுள்ளான். நான் ஓதிய இரண்டாவது வசனத்தில் இஸ்திக்ஃபார் செய்யும் வழிமுறை விளக்கப்பட்டுள்ளது. அந்த வசனத்தின் பொருள், மேலும் நீங்கள் உங்கள் இறைவனிடம் இஸ்திக்ஃபார் செய்யுங்கள். அவன் பக்கம் தவ்பா செய்தவாறு குனியுங்கள். அவன் குறிப்பிட்ட காலம் வரை உங்களுக்கு மிகச் சிறந்த பொருள்களை நீங்கள் பயன்படுத்துவதற்காக வழங்குவான். அருளுக்குரிய ஒவ்வொருவரும் தமது அருளை வழங்குவான். பின்னரும் நீங்கள் விலகி விட்டால் நிச்சயமாக நான் உங்களுக்கு ஒரு பெரும் தண்டனைக்குரிய நாளைக் குறித்து அஞ்சுகின்றேன்.

நான் ஏற்கனவே கூறியது போன்று உண்மையான இஸ்திக்ஃபார் செய்பவருக்கு இறைவன் வழிகாட்டலை வழங்குவான்.

இந்த வசனத்தில் ஆரம்பத்தில் அல்லாஹ் இதன் தத்துவத்தை விளக்கியுள்ளான். அல்லாஹ்விடம் உதவி கேளுங்கள். அவனிடம் துஆ செய்யுங்கள். உங்கள் உள்ளத்தால் தூய்மையான அடியார் ஆகுங்கள். அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப உதவி செய்வான். ஆனால் ஒரு மனிதன் இன்று ஒரு வழியிலும் நாளை வேறொரு வழியிலும் செல்கிறார். நிரந்தரமான மனப்பான்மையில் இஸ்திக்ஃபார் செய்யவில்லை எனில் அது அல்லாஹ்வின் பார்வையில் இஸ்திக்ஃபர் அல்ல.

உண்மையான இஸ்திக்ஃபார் என்பது இறைவனுக்கு பிடிக்காத, இறைவனை அடைவதைத் தடுக்கின்ற உணர்வுகளிலிருந்தும், எண்ணங்களிலிருந்தும் தப்பிப்பதற்காக துஆ செய்வதாகும். இந்தத் தகுதியை அடைந்து விட்டால் உணர்வுகளை அடக்கும் திறமை உருவாகி விட்டால் தூபு இலைஹி என்ற நிலை உருவாகும். மனிதன் ஒரு நிரந்தர மனப்பான்மையுடன் இறைகட்டளையின்படி அமல் செய்ய முயற்சி செய்யும் போது தான் இந்நிலை உருவாகும். இந்நிலை உருவாகி விட்டால் அடியான் அல்லாஹ்வின் நெருக்கத்திற்கு உரியவன் ஆகிவிடுவான். எனவே எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். உண்மையான இஸ்திக்ஃபார் மற்றும் தவ்பா செய்வதற்கு வெறும் வார்த்தைகளை திரும்பத் திரும்ப மொழிவதோ அல்லது வாயினால் அஸ்தக்ஃபிருல்லாஹ், அஸ்தக்ஃபிருல்லாஹ் என்று கூறுவதோ போதாது. மாறாக அத்துடன் தமது நிலையை மாற்ற முயற்சி செய்வதும் அவசியமாகும். இதுவே மனிதனுக்கு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தரும். முன்னர் கூறியது போன்று இதனால் மனிதனுக்கு மார்க்க மற்றும் உலகப் பயன்கள் கிடைக்கின்றன. அல்லாஹ்வின் அருள் இறங்குவதற்குக் காரணமாகின்றன.

இந்த வசனத்தின் ஒளியில் இஸ்திக்ஃபார் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

*வனிஸ் தக்ஃபரு ரப்பகும் ஸும்ம தூபு இலைஹி - நீங்கள் உங்கள் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரி அவன் பக்கம் திரும்புங்கள்.* நினைவில் கொள்ளுங்கள். இந்த உம்மத்திற்கு இரு அம்சங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒன்று சக்தியைப் பெறுவதும், மற்றொன்று பெற்ற சக்தியைச் செயலளவில் காட்டுவதும் ஆகும்.

ஒன்று சக்தியைப் பெறுவதற்காக வழங்கப்பட்டுள்ளது. இதனால் மனிதன் தீமையிலிருந்து தப்பிக்கலாம். மற்ற அம்சம் சக்தி கிடைப்பதற்கு அதனை செயலில் வெளிப்படுத்துவதற்குப் பயன்படுகிறது. மனிதனின் ஒவ்வொரு சொல்லும் செயலும் இறைவனின் கட்டளைக்கேற்ப அமைய வேண்டும். அவை இறை திருப்தியைப் பெற்றுத் தருபவையாக வேண்டும்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: சக்தியைப் பெறுவதற்காகவே இஸ்திக்ஃபார் உள்ளது. இதனை இன்னொரு வார்த்தையில் உதவி கேட்டல் என்று கூறலாம்.

சூஃபிகள் எழுதியுள்ளார்கள். உடற்பயிற்சிகளைச் செய்வதால் உதாரணமாக, எடை தூக்குவதாலும், சுழற்றுவதாலும் உடல்பலம் பெறுவது போன்று ஆன்மீக பலத்திற்கான பயிற்சியே இஸ்திக்ஃபார் ஆகும்.

அதனால் ரூஹ் –வுக்கு ஒரு சக்தி கிடைக்கிறது. உள்ளத்தில் இஸ்திகாமத் (நிலைத்து நிற்றல்) உருவாகிறது. எவருக்கு சக்தி வேண்டுமோ அவர் இஸ்திக்ஃபார் செய்யட்டும். எவர் தனது ஆன்மீக ஆற்றலை அதிகரிக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அவர் அதிகமதிகம் இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். கபர் என்பது மூடுதல், அமுக்குதல் ஆகியவற்றிற்குக் கூறப்படும். இஸ்திக்ஃபார் மூலம் மனிதன் இறைவனை விட்டு தடுக்கின்ற உணர்வுகளையும், எண்ணங்களையும் மூடி அமுக்கி விட விரும்புகின்றான். இஸ்திக்ஃபார் செய்து வாருங்கள். அதனால் அல்லாஹ்வின் கட்டளைகளுக் கட்டுப்படுவதைத் தடுக்கின்ற, நன்மையிலிருந்து தடுக்கின்ற எண்ணங்கள் அமுக்கப்படுகின்றன. திருக்குர்ஆனில் நூற்றுக்கணக்கான கட்டளைகள் உள்ளன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனின் ஒரு கட்டளைக்குக் கூட முக்கியத்துவம் தராவிட்டால் நீங்கள் முழுமையாக முயற்சி செய்யவில்லை என்று பொருள். தொடர்ந்து கூறுகின்றார்கள். இஸ்திக்ஃபார் என்பது மனிதனை அழிக்க விரும்புகின்ற நச்சுத்தன்மை கொண்ட எண்ணங்களை மனிதன் வெல்வது ஆகும். நச்சுத்தன்மை கொண்ட எண்ணங்கள் என்பது என்ன? ஷெய்த்தானின் தாக்குதல், உலக ஆசைகள், உலக மோகம் அல்லாஹ்வின் விலக்கல் கட்டளை – அதாவது செய்யக்கூடாது என்று தடுக்கப்பட்ட கட்டளைகளிலிருந்து விலகாமல் இருத்தல் இவை அனைத்தும் நச்சுத்தன்மை கொண்ட எண்ணங்கள் ஆகும். மனிதன் இஸ்திக்ஃபார் செய்யும் போது இந்தத் தீமையிலிருந்து தப்பிப்பான். நன்மைகள் இந்த தீமைகளை வென்று விடும். கூறுகின்றார்கள்: இறை கட்டளைகளை எல்லா தடைகளையும் கடந்து செயலளவில் செய்து காட்டுதல் வேண்டும். ஒரு விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள். மனிதனிடம் அல்லாஹ் இரு வகையான மூலப்பொருள்களை வைத்துள்ளான். ஒன்று, நச்சுத்தன்மை கொண்டது. இதனைத் தூண்டுபவன் ஷெய்த்தான் ஆவான். இரண்டாவது, விஷமுறிவு மூலப் பொருளாகும். நிவாரணம் தரும் மூலப்பொருள் ஆகும். இந்த இரண்டும் மனிதனுக்குள் உள்ளது. தீமையும் மனிதனுக்குள் உள்ளது. நன்மையும் மனிதனுக்குள் உள்ளது. நன்மைகளால் தீமைகளை அமுக்கா விட்டால் பாவங்களுக்கு மன்னிப்பு வழங்குபவனாகிய அல்லாஹ்வின் பாதுகாப்பின் கீழ் வராவிட்டால் அந்தத் தீமைகள் ஆதிக்கம் பெற்று விடும்.

கூறுகின்றார்கள்: மனிதன் தற்பெருமை கொள்கிறான். தன்னை ஒரு பொருட்டாகக் கருதுகிறான். விஷமுறிவுப் பொருளிலிருந்து உதவி பெறவில்லை என்றால் நச்சத்தன்மை கொண்ட சக்தி மிகைத்து விடுகிறது. இஸ்திக்ஃபார் செய்யாவிட்டால் உள்ளத்தை ஆதிக்கம் செலுத்துகிற தற்பெருமை, பிறகு இஸ்திக்ஃபார் செய்வதிலிருந்தும் தடுத்து விடுகிறது. மனிதன் பெருமை கொண்டு தன்னை ஒரு பொருட்டாகக் கருதும் போது,

விஷமுறிவுப் பொருளாகிய இஸ்திக்ஃபாரிலிருந்து உதவி பெறாத போது நச்சுத்தன்மை மனிதனிடம் ஆதிக்கம் செலுத்தி விடுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதன் தன்னைத் தாழ்வாக நினைக்கும்போது அந்த மனிதன் தனக்கு இறை உதவி தேவை என்பதை உணர்கிறார். அப்போது அல்லாஹ்வின் புறமிருந்து ஓர் ஊற்று உருவாகிறது. அதனால் அவனது ரூஹ் உருகி வழிகிறது. இதுவே இஸ்திக்ஃபார் என்பதன் பொருள் ஆகும்.

ரூஹ் உருவாகி விடுவது தான் உண்மையான இஸ்திக்ஃபார் ஆகும். ரூஹ் உருவாகி விடுதல் என்பது வெறும் வாயளவிலான இஸ்திக்ஃபார் அல்ல. மாறாக உள்ளத்திலிருந்து ஓர் உத்வேகத்துடன் வெளிப்பட வேண்டும். அதுவே இஸ்திக்ஃபார் ஆகும். பிறகு அது கண்ணீரின் வடிவில் இறைவன் முன் சிந்தும்போது பிறகு அதுதான் மனிதனிடம் ஒரு புரட்சியை உருவாக்கும்.

கூறுகின்றார்கள்: இந்த சக்தியைப் பெற்று நச்சுத்தன்மை கொண்ட உணர்வுகளை வென்று விடுங்கள்.

ஏற்கனவே கூறியது போன்று இஸ்திக்ஃபார் –ஆல் சக்தி கிடைக்கிறது. அந்த இஸ்திக்ஃபார் மனித உள்ளத்தில் இருந்து வெளிப்படுவதாகும். அது கண்ணீரின் வடிவில் வெளிப்படுகிறது. அதுவே உண்மையான இஸ்திக்ஃபார் ஆகும். அது மனிதனிடத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துகிறது. பிறகு கூறுகின்றார்கள். இதன் பொருள் இபாதத்தில் நிலைத்து நில்லுங்கள். முதலில் ரஸூலுக்கு கட்டுப்படுங்கள். இரண்டாவது, எப்போதும் இறைவனிடம் உதவி தேடுங்கள். ஆம்! முதலில் உங்கள் இறைவனிடம் உதவி கேளுங்கள். ஆற்றல் கிடைத்த பிறகு *தூபு இலைஹி - இறைவன் பக்கம் திரும்புங்கள்*. அல்லாஹ்வினால் கூறப்பட்ட வழிமுறைக்கேற்ப ரஸூலுக்குக் கட்டுப்படுங்கள். அல்லாஹ்விடம் உதவி கேட்டவாறு அவன் முன்னால் குனிதல் வேண்டும். பிறகு ரஸூலுக்குக் கட்டுப்படுங்கள். பிறகு தொடர்ந்து மனிதன் இறைவன் முன் குனிந்திருந்தால் அவனிடம் உதவி கேட்டுக் கொண்டிருந்தால் *தூபு இலைஹி* என்ற நிலை உருவாகும். அதன் மூலம் அல்லாஹ் அவரது தவ்பாவை ஒப்புக் கொண்டு தீமையிலிருந்து அவரைத் தடுப்பதற்காக இறைவன் பக்கம் திரும்புகிறார்.

**தூபு இலைஹி-ஐ இன்னும் விளக்கியவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இஸ்திக்ஃபார், தவ்பா ஆகியவை இரு வெவ்வேறு அம்சங்களாகும். ஒரு வகையில் இஸ்திக்ஃபாருக்கு தவ்பாவை விட முதன்மை உள்ளது. அது முதலிலும் உள்ளது. இஸ்திக்ஃபார் தவ்பாவை விட முதன்மை வாய்ந்ததாகும். இஸ்திக்ஃபார் என்பது உதவி மற்றும் சக்தியை இறைவனிடமிருந்து பெறுவதாகும். தவ்பா தமது காலில் நிற்றல் ஆகும். இஸ்திக்ஃபார் முதலில் உள்ளது. அதனால் உதவியும் ஆற்றலும் கிடைக்கிறது. அதற்காக இறைவனுக்கு முன்னால் கண்ணீர் சிந்தப்படுகிறது. உள்ளம் எல்லா வகையான கலப்படங்களிலிருந்தும் தூய்மையாக்கப்படுகிறது. இது அனைத்தும் இஸ்திக்ஃபார் – ஆல் நடைபெறுகிறது. எனவே இது முதலில் உள்ளது. பிறகு இது கிடைத்து விட்டால் மனிதனுடைய இரண்டாவது அடி தவ்பா ஆகும். அதாவது தமது காலில் நிற்பதும், நிரந்தரத் தன்மையுடன் இருப்பதும், அதாவது தவ்பாவுக்காகவும் அதில் நிலைத்து நிற்பதற்காகவும் இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். இக்காலத்தில் நடைமுறையில் இருப்பது போன்று காதில் கை வைத்து தவ்பா, தவ்பா என்று கூறுவது தவ்பா அல்ல. முதலில் இஸ்திக்ஃபார் செய்து ஆற்றலைப் பெறுங்கள். தகுதியைப் பெறுங்கள். நன்மையின் பக்கம் கவனம் ஏற்பட்டு விட்டால் பிறகு தவ்பா உருவாகி விட்டது. பிறகு இதில் நிலைத்து நிற்பதற்கும்கூட இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும்.

கூறுகிறார்கள்: இறைவனுடைய வழக்கம் இதுவாகும். ஒருவர் இறைவனிடம் உதவி கேட்டால் இறைவன் ஒரு சக்தியை வழங்குவான். பிறகு மனிதன் தனது காலில் நிலைத்து நிற்பான். பிறகு நன்மைகளைச் செய்வதற்கு ஓர் ஆற்றல் உருவாகும். இதன் பெயர் தூபு இலைஹி ஆகும். எனவே இயல்பாகவும் கூட இதே ஒழுங்குமுறைதான் உள்ளது. இதுவே இறைவழியில் செல்லும் ஒரு நல்லவருக்கு வைக்கப்பட்டுள்ளது. அவர் அதற்காக இறை உதவியை நாடுகிறார். நல்லவர் (சாலிஹ்) இறைவனிடம சக்தியைப் பெறாதவரை என்ன செய்யப் போகிறார்? தவ்பா என்ற வாய்ப்பே இஸ்திக்ஃபாருக்கு பிறகு தான் கிடைக்கிறது. இஸ்திக்ஃபார் இல்லையெனில் நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள்; சக்தி இறந்து விடும். இவ்வாறு இஸ்திக்ஃபார் செய்து

பிறகு தவ்பா செய்தால் *யுமத்திகும் மதாஅன் ஹஸனன் இலா அஜலின் முஸம்மா* - *ஒரு குறிப்பிட்ட காலம் வரை அவருக்கு இறைவனே அதற்கான பொருள்களை வழங்கி வருவான்.*

கூறுகின்றார்கள்: இறைவனது நடைமுறை இவ்வாறு தான் உள்ளது. நீங்கள் இஸ்திக்ஃபார் மற்றும் தவ்பா செய்வீர்கள் எனில் உங்கள் தகுதி வட்டத்திற்குட்பட்ட குறிக்கோளைப் பெறுவீர்கள். ஒவ்வொரு சக்திக்கும் அவரவர் தகுதிக்கு ஏற்ப ஓர் எல்லை உள்ளது. அதில் தமது முன்னேற்றத்தின் படித்தரங்களைப் பெறுகின்றனர். ஒவ்வொருவருக்கும் ஒரு செயல் வட்டம் உள்ளது. அவரவர் திறனுக்கேற்ப தம் வட்டத்தில் அவர் உயர் தரங்களை அடைகிறார்.

கூறுகின்றார்கள்: ஒவ்வொருவரும் நபி, ரஸுல், ஸித்தீக், ஷஹீது ஆக ஆகி விட முடியாது. ஒவ்வொருவரும் எல்லா அந்தஸ்தையும் பெற்றுவிட முடியாது. படித்தரங்களில் சிறப்பானவை உள்ளன. ஒவ்வொரு இறைவழி பயணியாகிய நல்லடியாருக்கும் தத்தமது குறிக்கோளை தமது தகுதிக்கேற்ப பெறுவர். ஒருவர் நிரந்தரமாக முயற்சி செய்து வரும்போது தமது திறமைக்கேற்ப படித்தரத்தைப் பெறுவார். இதுவே இந்த சிறப்பைப் பெற்றுள்ள ஒவ்வொருவருக்கும் இறைவன் தனது சிறப்பை வழங்குவான் என்ற வசனம் கூறுகிறது. ஏற்கனவே விளக்கப்பட்டது போன்று இக்காலத்தில் மார்க்கப் பரக்கத்துகள், ஆன்மீக பரக்கத்துகள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கின்றன. மறு உலகிலும் அவனது அருளின் காரணத்தால் கிடைக்கின்றன.

பிறகு கூறுகின்றார்கள்: எவர் அதிகம் கொண்டு வருவாரோ அவருக்கு இறைவனும் அதிகம் வழங்குவான். யாருக்கு எவ்வளவு தர வேண்டும்? என்பதும் அவனது அருளே ஆகும். அவனது அந்த அருளும் கூடவே செல்கிறது. அல்லாஹ் தனது அருளால் அளவற்ற முறையில் அதிகமாக்கித் தர விரும்பினால் இந்த இஸ்திக்ஃபார் மற்றும் தவ்பாவினால் அதிகமாக்கியும் தருவான். இந்த முயற்சியின் காரணத்தால் செய்வான். ஆனால் முதல் நிபந்தனை தவ்பா, இஸ்திக்ஃபார் இருக்க வேண்டும். பிறகு அல்லாஹ் அதனை வளர்ப்பான்.

கூறுகின்றார்கள்: இயல்பாக அவரவருக்குரிய உரிமையை ஒவ்வொருவரும் பெறுவர். அதிகம் வழங்குவது இறைவன் அரசனாக இருப்பதால் நடைபெறும். உழைப்பினால் அல்ல. அவன் எவ்வளவு விரும்பினாலும் தர முடியும். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் இஸ்திக்ஃபார் செய்பவர்களுக்கு முயற்சி செய்பவர்களுக்கு தனது அருளை வழங்குகிறான். இறைவன் தடுத்து வைப்பதில்லை. மேலும் சிலர் கூறுகின்றார்கள்:

நாம் 'வலி' ஆக வேண்டும். அத்தகையோர் கூறுகின்றார்கள். பாவம் செய்பவர் காஃபிர் ஆவார். மனிதன் இயற்கைச் சட்டத்தை கைக்கொண்டு பணி செய்ய வேண்டும். இறைவன் இஸ்திக்ஃபார், தவ்பா உடைய வாசலைத் திறந்து வைத்துள்ளான். சட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளான். எனவே அதனை பயன்படுத்துங்கள். முயற்சி செய்யவும் வேண்டும். நீங்கள் முயற்சி செய்யுங்கள். அதுபோக அல்லாஹ்வின் அருள் உள்ளது. அது ஒவ்வொருவரின் தகுதி, திறமைக்கேற்ப வழங்கப்படுகிறது.

இந்த அறிவு சார்ந்த ஆன்மீக கருத்துக்களுடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சபைகளில் நடைபெற்ற சில உரையாடல்கள் குறித்து விளக்குகிறேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மஜ்லிஸில் மக்கள் என்ன கேள்வியை எழுப்பினர். அத்தகைய மஜ்லிஸ்களின் அன்னார் இஸ்திக்ஃபாரின் முக்கியத்துவத்தை எவ்வாறு தெளிவுபடுத்தினார்கள் என்று பார்ப்போம்.

அறிவிப்பில் வருகிறது. ஒருவர் கேட்டார். நான் என்ன வஸீஃபாவை ஓதி வர வேண்டும். அக்காலத்தில் மக்களிடம் வஸீஃபா கேட்டு ஓதி வருவதில் ஓர் ஆர்வம் இருந்தது.

அன்னார் கூறினார்கள்: இஸ்திக்ஃபார் அதிகமாக ஓதுங்கள். மனிதனுக்கு இரு நிலைகள் தான் உள்ளன. ஒன்று, பாவம் செய்யாமல் இருப்பது. அல்லது பாவத்தின் தீய விளைவில் இருந்து தப்பிப்பது. ஒன்று பாவம் செய்யாமல் இருக்க வேண்டும். பாவம் ஏற்பட்டு விட்டால் மனிதனை அதன் தீய விளைவிலிருந்து அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்.

எனவே இஸ்திக்ஃபார் ஓதும் போது இந்த இரு பொருள்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். இஸ்திக்ஃபார் ஓதும்போது இந்த இரு பொருள்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இது பெரும் வஸீஃபா ஆகும்.

ஒன்று மனிதன் பாவம் செய்யாமல் இருக்க துஆ செய்கிறார். இரண்டு பாவம் நிகழ்ந்து விட்டால் அதன் தீய தாக்கம் ஏற்படாமல் இருத்தல் ஆகும்.

கூறினார்கள்: ஒன்று கடந்த காலத்தின் பாவங்களுக்கு திரையிட விரும்ப வேண்டும். இரண்டு வருங்காலத்தில் பாவத்திலிருந்து தப்பிப்பதற்கு வாய்ப்பை விரும்ப வேண்டும். இஸ்திக்ஃபார் என்பது வெறும் நாவினால் உருவாகாது. மாறாக உள்ளத்தால் உருவாக வேண்டும். தொழுகையிலும் உங்கள் மொழியில் துஆ கேளுங்கள். அது அவசியமாகும். எனவே இதுவே இஸ்திக்ஃபாரின் நோக்கமாகும். அதாவது பாவங்களுக்கு மன்னிப்பு, பாவங்களிலிருந்து தப்பித்தல், பாவங்கள் பற்றி அறிய இறை கட்டளைகளை திருக்குர்ஆனில் ஆய்வு செய்வது ஆகியவை அவசியமாகும்.

பிறகு ஒரு மஜ்லிஸில் ஒரு மனிதர் வந்தார். மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்களும் இருந்தார்கள். மவ்லவி சாஹிபை அம்மனிதர் சந்தித்ததும் அவரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் மவ்லவி சாஹிப் அறிமுகம் செய்து வைத்தார். அம்மனிதர் பெரும் பீர்களை சந்தித்து விட்டு பல சிரமங்களை மேற்கொண்டு வந்துள்ளார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த மனிதரிடம், நீங்கள் என்ன சொல்ல நினைக்கின்றீர்களோ அதனை சொல்லுங்கள் என்று கூறினார்கள். அந்த மனிதர், ஹுஸூர் நான் பல பீர்களைச் சந்தித்துள்ளேன். சில பலவீனங்கள் என்னிடம் இருந்தன. நான் எந்த பீரிடம் சென்றாலும் சில நாட்களில் அவரை விட்டுச் சென்று விடுகின்றேன். அவர் மீது நம்பிக்கை இல்லாமல் போய் விடுகிறது. அடுத்து என்னிடம் புறம் பேசும் பலவீனம் உள்ளது. மூன்றாவது இபாதத்தில் கவனம் இல்லை. இன்னும் பல குறைகள் என்னிடம் காணப்படுகிறது என்று கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் புரிந்து கொண்டேன். உமது அசல் நோய் பொறுமையின்மை ஆகும். மற்ற குறைகள் எல்லாம் அதன் பக்கவிளைவுகளாகும். உமது அசல் நோய் பொறுமையின்மையாகும்.

மனிதன் தனது உலகியல் விஷயங்களில் பொறுமை இழக்காமல் முடிவை எதிர்பார்த்து இருக்கிறார். பிறகு இறைவன் முன்னிலையில் மட்டும் ஏன் பொறுமையின்மை காட்டுகின்றார்?

ஒரு விவசாயி ஒரே நாளில் விதை தூவி அறுவடையும் செய்ய வேண்டும் என்று நினைப்பாரா? ஒரு குழந்தை பிறந்தவுடனே வளர்ந்து எனக்கு உதவிக்கு வர வேண்டும் என்று எவராவது கூறுவாரா? இறைவனது இயற்கைச் சட்டத்தில் இதுபோன்ற அவசரத்திற்கு எந்த முன்மாதிரியும் இல்லை. இதுபோன்று அவசரப்படுபவர் அறிவற்றவர் ஆவார்.

இவையெல்லாம் தனது குறை என்று எவருக்கு தென்படுகிறதோ அதுவே அவரது நற்பேறு என்று கூற வேண்டும். தனக்குள் இருக்கும் தீமையை தெரிந்து கொள்வது அவரது நற்பேறு ஆகும். இல்லையெனில், ஷைத்தான் தீய செயல்களை அழகிய வடிவமாக்கிக் காட்டி விடுகிறான். மனிதன் தனக்குள் இன்னின்ன குறைகள் உள்ளன என்று கண்டு கொள்வதும் அவரது சிறப்பம்சமேயாகும். ஏனெனில் ஷைத்தான் தனது வேலையைச் செய்து கொண்டிருக்கிறான். தீயதையும் நல்லதாக்கிக் காட்டுகிறான்.

கூறுகின்றார்கள்: நீங்கள் உமது பொறுமையின்மையை விட்டு விட்டு பொறுமை மற்றும் உறுதிப்பாட்டுடன் இறைவனிடம் வாய்ப்பைக் கேளுங்கள். பாவத்திற்கு மன்னிப்புக் கேளுங்கள். இது தவிர வேறு ஒன்றும் இல்லை. அல்லாஹ்வின் நல்லடியார்கள் ஒரேயோர் ஊது ஊதி தம்மை சீர்திருத்தி விட வேண்டும் என்ற நோக்கத்தில் ஒருவர் வருவார் எனில் இறைவன் மீது ஆட்சி செய்ய விரும்புகிறார். இங்கு அவர் ஆளப்படுபவராக வந்திருக்க வேண்டும். தனது எல்லா அதிகாரங்களையும் விடாதவரை ஒன்றும் ஆகப்போவதில்லை. நோயாளி மருத்துவரிடம் சென்று நிறைய நோய்களைக் கூறுகிறார். ஆனால் மருத்துவர் நோயை அறிந்த பிறகு இது தான் அசல் நோய் என அறிந்து சிகிச்சையைத் தொடங்குகிறார். அதுபோன்று உமது நோய் பொறுமையின்மை. இதற்கு சிகிச்சை செய்தால் மற்ற நோய்களும் இறைவன் நாடினால் அடங்கி

விடும். நமது கொள்கை மனிதன் இறைவனிடம் ஒருபோதும் நம்பிக்கை இழந்து விடக் கூடாது என்பதாகும். இறுதி மூச்சு வரை அவர் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதுவரை மனிதன் தனது பொறுமையையும் வேண்டுதலையும் கொண்டு செல்லா விட்டால் அவனால் வெற்றி பெற முடியாது.

இதுவே பொறுமையின் நிலை ஆகும். இறுதி மூச்சு வரை பொறுமை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் கூறுகிறார்கள்: ஒரே மூச்சில் உங்களுக்கு வெற்றி வழங்க இறைவன் ஆற்றல் உள்ளவனாவான். கடைசி மூச்சு வரை உங்களை எதிர்பார்க்க வைக்க அவசியமில்லை. ஒரு துஆ ஒரு ஸஜ்தாவிலேயே ஒப்புக் கொண்டு விடுகிறான். ஆனால் நமது வேண்டுதல் நிரந்தரத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.

ஸஅதி ஒரு பார்ஸி கவிதையில் கூறுகிறார்: நண்பனை அடைய முடியா விட்டாலும் கூட இஷ்கின் (பேரின்பக் காதலின்) அடிப்படை நிபந்தனை அவனது தேடலின் விருப்பத்துடனேயே மரிக்க வேண்டும். அவனைப் பெற்றே தீருவது என்ற ஆசையில் மரிப்பது அடிப்படை நிபந்தனையாகும்.

கூறுகிறார்கள்: நோய் இரு வகைப்படும். ஒன்று, இஸ்திகா – வலி, வேதனைக்காக அதன் சிசிச்சைக்காக மனிதன் கவலை கொள்கிறான். இரண்டாவது மறைவான நோய். அது பற்றிய உணர்வு இருப்பதில்லை. இதுபோன்று சில பாவங்களை மனிதன் உணர்கிறான். சில பாவங்களை மனிதன் உணருவதில்லை. எனவே மனிதன் எப்போதும் இறைவனிடம் இஸ்திக்ஃபார் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். கபர்களுக்குச் செல்வதினால் என்ன பயன் கிடைக்கப் போகிறது? இறைவன் சீர்திருத்துவதற்காக திருக்குர்ஆனை அனுப்பினான்.

ஒரேயோர் ஊது ஊதி சீர்திருத்தி விடுவது இறைவனது சட்டமாக இருக்குமானால் இறை தூதர் (ஸல்) அவர்கள் பதிமூன்று வருடங்கள் ஏன் கஷ்டப்பட்டார்கள்? அபூஜஹ்லி மீது தனது தாக்கத்தை ஏன் ஏற்படுத்தவில்லை? துஆ செய்து தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பார்கள். அபூஜஹ்லை விடுங்கள். அபூதாலிபிற்கு அன்னார் மீது அன்பு இருந்தது. இருந்தும் முஸ்லிம் ஆகவில்லை. சுருக்கமாக பொறுமையின்மை நல்லதல்ல. அது இறுதியில் அழிவுக்குக் கொண்டு போய் விடுகிறது.

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மஜ்லிஸில் ஒருவர் கடன் பற்றி துஆ செய்யுமாறு கேட்டுக் கொண்டார். கடன் அதிகமாகி விட்டது என்றார். அன்னார் கூறினார்கள்: அதிகமாக இஸ்திக்ஃபார் செய்யுங்கள். கவலைகளிலிருந்து தப்பிப்பதற்கு இதுவே வழி ஆகும். அதாவது இஸ்திக்ஃபார் செய்யுங்கள். கவலை, துன்பத்தைக் குறைக்கவும் இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும்.

மேலும் கூறினார்கள்: இஸ்திக்ஃபார் முன்னேற்றத்தின் சாவி ஆகும். அதாவது உங்கள் வெற்றியின சாவி இஸ்திக்ஃபாரில் தான் உள்ளது. எந்த இஸ்திக்ஃபார் வெற்றியை தரும் என்பது பற்றி முதலில் கூறப்பட்டு விட்டது. மனிதன் எவ்வாறு தூய்மையான முறையில் இறைவன் முன் குனிய வேண்டும் என்று கூறப்பட்டது. ஒரு மனிதர் எனக்கு குழந்தை வேண்டும். துஆ செய்யுங்கள் என்று கூறிய போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இஸ்திக்ஃபார் அதிகமாக செய்யுங்கள். இதனால் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அல்லாஹ் சந்ததிகளையும் வழங்குகிறான்.

நினைவில் கொள்ளுங்கள். உறுதி பெரிய விஷயமாகும். இஸ்திக்ஃபார் செய்கிறீர்கள். இறைவன் மீது உறுதியும் கொள்ள வேண்டும். ஸகின் முழுமையாக இருந்தால் இறைவனே வந்து உதவி செய்கிறான். ஒரு சமயத்தில் கூறினார்கள். மனிதன் பலவீனத்திலிருந்து தப்பிப்பதற்கு அதிகமாக இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். பாவத்தின் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கு இஸ்திக்ஃபார் செய்வது என்பது ஒரு கைதி அபராதம் செலுத்தி தன்னை விடுவித்துக் கொள்வது போன்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் போதனை செய்தவாறு கூறினார்கள்: சிலர் அதிகமாக துக்கத்தில் மூழ்கி உள்ளனர். இவர் அவர்களது தவறுகளின் விளைவேயாகும். மய்யஃமல் மிஸ்கால ஸர்ரத்தன் ஷர்ரய்யரா – ஓர் அணு அளவு தீமை செய்தாலும் அதனையும் கண்டு கொள்வான். மனிதன் இஸ்திக்ஃபாரில் மூழ்கியிருப்பது

அவசியமாகும். தீய செயல்கள் எல்லை கடந்து விடாமல் மனிதன் பார்த்துக் கொள்ள வேண்டும். அது இறை கோபத்தை ஈர்த்துக் கொண்டு வந்து விடும். அல்லாஹ் ஒருவர் மீது அருளுடன் கவனம் செலுத்தினால் மக்களின் உள்ளத்திலும் அவர் மீது அன்பைப் போடுகிறான். எப்போது மனிதனின் தீமை எல்லை கடந்து விடுமோ அப்போது வானத்தில் அவர் மீது எதிர்ப்பு உருவாகி, அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப மக்களின் உள்ளமும் கடினமாகி விடுகிறது. இறைவன் இவர் மீது கவனம் செலுத்தப் போவதில்லை. அருள் செய்யப் போவதில்லை என்று முடிவு செய்து விட்டால் அவருக்காக மக்களின் உள்ளமும் கடினமாகி விடுகிறது. அவர் துஆ இஸ்திக்ஃபாருடன் இறைசன்னிதானத்தில் விழும்போது உள்ளுக்குள்ளேயே மக்களிடம் கருணை உருவாகிறது. எவருக்கும் தெரியாமல் அவர் மீது அன்பு மக்களின் உள்ளத்தில் விதைக்கப்படுகிறது. மனித உள்ளம் கடினப்பட்டு விட்டால், அல்லாஹ்வுடைய அருளுக்கு வாரிசாகவில்லை எனில், அவருடன் இறைவன் அதிருப்தியை வெளிப்படுத்துகிறான் எனில் அதன் பிறகு அவர் இஸ்திக்ஃபார் மற்றும் தவ்பா செய்தார் எனில் இறைவன் ஒப்புக் கொள்கிறான். அதன் விளைவாக மக்களுடைய உள்ளத்தில் அவர் மீது கருணை போடப்படுகிறது.

கூறுகிறார்கள்: அவர் மீது அன்பு மக்களின் உள்ளத்தில் விதைக்கப்படுகிறது. எனவே தவ்பா, இஸ்திக்ஃபார் மிகச் சிறந்த மருந்தாகும்.

இன்று இந்த உலகவாதிகளின் தீய செயல்கள் பல்வேறு நாடுகளில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. தம்மை பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றவராக கருதிய தலைவர்கள் எல்லாம் மக்களின் பார்வையில் மிக மோசமானவராகி விட்டனர். தமது கருத்தின்படி, தமக்கு நன்மதிப்பு, மக்கள் நம்மீது பிரியம் வைத்துள்ளார்கள் என்று நினைத்தனர். ஆனால் நிகழ்ந்தவை அரசுகளை மாற்றி விட்டன. இது இன்னும் அதிகமான குழப்பத்தை ஏற்படுத்தி விட்டது. வருங்காலத்தில் என்ன குழப்பம் ஏற்பட உள்ளது என்று இறைவனே நன்கறிவான். எனவே மிக அதிகமாக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் உலகை இந்த குழப்பத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். ஆகவே இஸ்திக்ஃபார் இறைவனது நோக்கத்தை நிறைவேற்றுகிறது. இறைவனுக்கு ஆற்ற வேண்டிய கடமை, மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமை ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டுகிறது. அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டவருடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்துகிறது. காலத்தின் குழப்பம், இறைகோபம் ஆகியவற்றிடமிருந்து பாதுகாக்கிறது. அல்லாஹ்வின் நெருக்கம் பெறும் வழிகளில் நடத்திச் செல்கிறது. அதனால் இம்மையும் மறுமையும் கிடைக்கிறது. அதே வேளையில் மனிதனின் சொந்த தேவைகளை நிறைவேற்றவும் சொந்தப் பிரச்சனைகளை அகற்றவும் காரணமாக உள்ளது.

நான் ஏற்கனவே நிறைய சம்பவங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் போதனை செய்த சம்பவங்களைக் கூறியுள்ளேன். அல்லாஹ்வுடைய ஏராளமான எண்ணற்ற அருள்களுக்கும் மனிதன் இஸ்திக்ஃபாரினால் வாரிசாகிறான். அல்லாஹ் அஹ்மதிகளின் மீது அருள்புரிந்துள்ளான். நாம் இக்காலத்தின் இமாமை ஏற்றுள்ளோம். அவர் நமக்கு இபாதத்கள் மற்றும் அவனது நெருக்கம் ஆகியவற்றை பெறுவதற்கு வழிகாட்டியுள்ளார்கள். ஆனால் அதிலிருந்து உண்மையான பயனடையவும் நாம் ஒரு நிரந்தர தன்மையுடன் இஸ்திக்ஃபார் செய்ய வேண்டிய தேவை உள்ளது. இதனை ஒவ்வொரு அஹ்மதியும் தமது உயிர் ஆசையாகக் கொள்ள வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கு வாய்ப்பு அளிப்பானாக.

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 13.01.2012**

Translated by : Muallim M. NIZAMUDEEN
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456